அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 7/91

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்- கொழும்பு. 7
1991, பெப்ரவரி 23ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாண அரசாங்கச் சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்களுக்கும்.

**பயங்கரவாதம் நிலவும் பிரதேசங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை செலுத்துதல்.**

---

1986.12.11ஆந் திகதி இல. 357, 1989.08.14ஆந் திகதி இல. 40/89 1989.09.06ஆந் திகதி இல. 46/89 மற்றும் 1990.10.12ஆந் திகதி இல. 42/90 கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்று நிருபங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்தவு

..3

02. மேற்கூறிய சுற்று நிருபங்களில் காட்டப்பட்டுள்ள முறைகளுக்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள உரிமை இருந்த போதும் சில நிறுவனங்கள் நிதி வசதியில்லாத காரணங்களினாலும் அவற்றை செலுத்தவில்லையென தெரியவந்துள்ளது. சேவை நிலையம் திறக்கப்பட்டு உண்மையாக உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளித்திருந்தது சம்பந்தமாக உறுதியான சாட்சிகள் இருப்பின் அத்தகைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உரித்தாகும். எனினும் அத்தகைய ஊக்குவிப்புக்களை இதுவரை செலுத்தப்படாமலிருப்பதுமான உத்தியோகத்தர்களுக்கு அவற்றை 1983.01.01ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும் வண்ணம் செலுத்துவதற்கு தேவைப்படும் நிதியை திறைசேரியினால் வழங்கப்படல் வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. மாவட்டத்தில் சேவை புரியும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட லீவுகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்ட லீவுகள் என்பவற்றுக்கிணங்க கொடுப்பனவுகள் விகிதாசார அடிப்படையில் குறைதல் வேண்டும். எவ்வாறு இருப்பினும் குறிப்பிட்ட நிறுவனங்கள் அக்காலத்தினுள் இயங்காமல் இருந்திருப்பின் இக்கொடுப்பனவுகள் செலுத்துவது சம்பந்தமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

04. 1989.08.14ஆந் திகதி இல.40/89கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் இறுதி வசனம் இத்தால் திருத்தப்படுவதுடன் கீழ்வரும் வசனம் அதன் பொருட்டு சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. 'பாதுகாப்பு அமைச்சினால் பயங்கரவாதம் நிலவும் பிரதேசம் என தீர்மானிக்கப்பட்ட திகதி அல்லது 1988.01.01 திகதி எனும் இவையிரண்டில் அடுத்து வரும் திகதி தொடக்கம் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். "பயங்கரவாதம் நிலவும் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பினும், ஆ பயங்கரவாதம் நிலவாத பிரதேசத்தில் கடமைபுரிபவராக இருப்பின் அவ் அரசாங் உத்தியோகத்தரொருவருக்கு இவ்வூக்குவிப்பு கொடுப்பனவை பெற உரிமையில்லை.

05. 89.12.26ஆந் திகதி 61/89 இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாக சுற்று நிருபத்தின்படி இத்திட்டத்தின் கீழ்வரும் செலுத்தல்கள் 1.1.90முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக தயவுகூர்ந்து குறித்துக் கொள்ளல் வேண்டும்.

06. மேற்கூறிய சுற்று நிருபத்தில் காட்டப்பட்டுள்ள காரியங்களின் பொருட்டு கூறப்படும் அரசாங்க "உத்தியோகத்தர்" என்ற பதம் தாபன விதிக்கோவையின் 1ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள "உத்தியோகத்தர்" என்பதையே குறிக்கின்றது.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பிரதிகள்:
1. திறைசேரியின் பிரதிச் செயலாளர், "
2. அரசாங்க கூட்டுத்தாபனங்களின்/முழுமையாக அரசுக்குரித்தான கம்பெனிகளின், அரசு பொறுப்பேற்ற வர்த்தக நிறுவனங்களின் உரிய அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும். " - கவனத்திற்கு
3. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் "